கேட்டிருக்கின்றார்கள். அந்தப் பகுதியிலே மின்னழுத்தம் எந்த அளவுக்கு இருக்கிறதென்பதை ஆராய்ந்து, தேவையிருப்பின், நிதி நிலைக்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

103—

மகளிர் கலைக் கல்லூரி

***105—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு நரிக் கூட்டங்கள் சிங்கத்தை எதிர்கொள்ள முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினத்தினுடைய சிங்கமாக, தமிழர்களுடைய அங்கமாக, உயர் கல்வித் துறையினுடைய ஈடில்லா அங்கமாக விளங்குகிற,*

2016 ஆகஸ்ட் 24]
மாட்சிமை நிறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்னடிகளைப் போற்றி வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டினால் வேண்டும் வரம் தருபவரே அம்மா! அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கொரு வரம் தருவாயா! கருணைத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கொரு வரம் தருவாயா! (மேசையைத் தட்டும் ஒலி) என காட்டுமன்னார்கோவில் தொகுதி மக்கள் வேண்டுகிறார்கள். வரம் கேட்டு வணங்கும் கைகள் விலகும் முன்னே, வரம் தரும் அன்னையாக விளங்குகிற தமிழ்த் தாயின் தலைமகள்! கருணை மழை பொழியும் கலைமகள்! உயர் கல்வித் துறையை எவரும் தொட்டுக்கூடப் பார்க்க முடியாத உயரத்திற்கு உயர்த்தி, (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டுக்கே வழிகாட்டுகிற நற்றமிழ் அன்னை, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கருணைப் பார்வைக்குக் கொண்டு சென்று, வருங்காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வாரா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவில் தொகுதி அமைந்துள்ள கடலூர் மாவட்டத்தில் ஏற்கெனவே 3 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவி பெறும் மகளிர் கலைக் கல்லூரியும், ஒரு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியும் மற்றும் 17 சுய நிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் ஆக மொத்தம் 22 கல்லூரிகள் இயங்கி வருகின்றன. காட்டுமன்னார்கோவில் தொகுதி அமைந்துள்ள கடலூர் மாவட்டம், கடலூரில் மகளிருக்கென்றே தனியாக அரசு உதவி பெறும் கல்லூரியான கந்தசாமி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது செயல்பட்டு வருகிறது. அத்துடன் காட்டுமன்னார்கோவில் தொகுதியின் அருகில் சிதம்பரம், சி.முட்லூர் என்னுமிடத்தில் இருபாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் அமைந்துள்ளது. மேலும், 2013-2014 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் காட்டுமன்னார்கோவில் தொகுதி அமைந்துள்ள கடலூர் மாவட்டம், திட்டக்குடியில் திருவள்ளுவர் பல்கலைக்கழக*

உறுப்புக் கல்லூரி ஒன்றும் துவங்கப்பட்டுள்ளது. அந்தக் கல்லூரிக்கு கட்டட வசதி ஏற்பாடு செய்து, அந்தக் கட்டடமும் முடிவுபெற்று, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டு, அந்தக் கல்லூரியும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மேற்கூறிய கல்லூரிகள் அனைத்தும் கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள காட்டுமன்னார்கோவில் தொகுதி மாணவ, மாணவியரின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே அமைந்திருக்கின்றன. இருப்பினும், கடலூர் மாவட்டத்திலுள்ள 3 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் ஒரு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியிலும் 2015-2016 மற்றும் 2016-2017 ஆகிய இரண்டு கல்வி ஆண்டுகளிலும் 4,088 மாணவ, மாணவியர் பயிலும் வகையிலே சேர்க்கையிடங்கள் ஒப்பளிக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சேர்க்கை இடங்கள் முழுமையாகப் பூர்த்தி அடைகின்ற வகையிலே, வரும் காலக்கட்டங்களிலே அங்கே மகளிருக்கென்று தனியாக ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தேவைப்படுகின்றபட்சத்திலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

முற்பகல் 10-20

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஒடுக்கப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின மக்கள் நிறைந்து வாழ்வதோடு, விளிம்பு நிலையில் வாழக்கூடியவர்களையும் கொண்ட தொகுதியாகும். இங்கு வசிக்கக்கூடிய மாணவிகள் உயர் கல்வி பயில வேண்டுமானால், நாகை, தஞ்சை மாவட்டங்களிலுள்ள மகளிர் கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. மகளிர் நலன் காப்பதில், இந்தியாவுக்கே வழிகாட்டுகிற மாதரசி மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) சாதியத்தை வேரறுத்து, மாண்புமிகு அம்மா அவர்களின் சாதனைகளுக்கு*

2016 ஆகஸ்ட் 24]
பெரு வெற்றியைத் தேடித் தந்த காட்டுமன்னார்கோவில் தொகுதியில், (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்ரீமுஷ்ணம் பகுதியில் மகளிர் கலைக் கல்லூரி அமைக்கத் தேவையான இடம் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மறுபரிசீலனை செய்ய வேண்டும். இன்று இல்லாவிட்டாலும், நாளை என்கின்றவகையில், எதிர்வரும் நிதியாண்டில் பரிசீலனை செய்யப்படும் என்று சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மகளிர் கலைக் கல்லூரி ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

அருகில் இருக்கக்கூடிய அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இளங்கலை அறிவியல் பட்டப் படிப்புகள் தொடங்குவதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த நிதியாண்டிலே பரிசீலனை செய்யப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு கொண்டு செல்லப்பட்டு, பரிசீலனை செய்யப்படும் என்றுதான் நான் சொன்னேன். அடுத்த நிதியாண்டு என்று நான் குறிப்பிடவில்லை.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி பார்க்கின்றபோது, கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் இன்றைக்கு மாணவர்களின் சேர்க்கைக்கான எண்ணிக்கை பூர்த்தியான அதேநேரத்தில், அந்த மாணவ, மாணவியர்களுடைய சேர்க்கையை கூடுதலாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தக் கல்வியாண்டிலே அரசு கலைக் கல்லூரிகளில் 20 சதவிகித சேர்க்கைகள் கூடுதலாகவும், அரசு உதவிபெறும் கல்லூரிகளில் 15 சதவிகித சேர்க்கைகள் கூடுதலாகவும், அதேபோல், சுய நிதி கல்லூரிகளில் 10 சதவிகித சேர்க்கைகள் கூடுதலாகவும் சேர்க்க

வழிவகை செய்திருக்கிறார்கள். மேற்படி மாவட்டத்தில், இன்றைக்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கின்றவர்களுடைய எண்ணிக்கையை பூர்த்தி செய்கின்றவகையிலே இது அமைந்திருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டுகிறேன்.

அதேபோல், புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்குவதற்கு அரசு விதிமுறைகளின்படி, மாநகராட்சிக்குட்பட்ட பகுதி என்றால் 2 ஏக்கர் நிலமும், நகராட்சிக்குட்பட்ட பகுதி என்றால் 3 ஏக்கர் நிலமும், கிராமப்புற பஞ்சாயத்துக்குட்பட்ட பகுதி என்றால் 5 ஏக்கர் நிலமும் தேவைப்படுகின்றது. மேலும், 15 ஆசிரியர் பணியிடங்களும், 17 ஆசிரியரல்லாத பணியிடங்களும் தேவைப்படுகின்றன. தொடரா செலவினமாக, கட்டடம் கட்டுவதற்கான செலவுத் தொகை 7 கோடியே 97 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகின்றது. அதேபோல், அறைகலன்கள், தளவாடங்கள், கணிப்பொறி மற்றும் இதர பொருட்களை வாங்குவதற்கான செலவுத் தொகை 31 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகின்றது. தொடரும் செலவினமாக, 93 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகின்றது. ஆக, ஒரு கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்றால், 9 கோடியே 21 இலட்சத்து 99 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகின்ற சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது.

சுதந்திரம் பெற்ற பிறகு, கோவை மாவட்டத்தில், ஒரு அரசு கல்லூரிகூட புதிதாகத் தொடங்கப்படவில்லை என்பதை அறிந்து, மேட்டுப்பாளையத்தில் ஒரு புதிய கல்லூரியைத் தொடங்குகின்றவகையில், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நேற்றையதினம் விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, பெரும்பாக்கத்தில் 4,689 மாணவர்கள் +2 முடித்துவிட்டு வெளியே செல்கின்ற சூழ்நிலையில், அவர்களுக்காக, 44 ஆண்டுகளுக்குப் பின், 2013 ஆம் ஆண்டு காஞ்சிபுரம், உத்திரமேரூரில் ஒரு கல்லூரியைத் தொடங்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டது. மேலும், ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை

2016 ஆகஸ்ட் 24]

பெரும்பாக்கத்திலும் அமைத்து சாதனை படைத்த வரலாறு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், இன்றைக்கு அனைவரும் தேவைப்படுகின்ற கல்வியைக் கற்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான்—கடலூர் மாவட்டத்தில் இருக்கின்ற கல்லூரிகளையெல்லாம் நாம் பார்த்தோம் என்றால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், பதிலை முடித்துவிட்டீர்களா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: இல்லை தலைவர் அவர்களே. அந்தக் கல்லூரிகளிலே மாணவர்களின் தேவைக்கு ஏற்றாற்போல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாடப்பிரிவுகளை அமைத்திருக்கிறார்கள். இன்றைக்கு ஒவ்வொரு கல்லூரியிலும், குறிப்பாக, பெரியார் கலைக் கல்லூரியைப் பார்த்தோம் என்றால், UG படிப்பில் 15 பாடப் பிரிவுகளும், PG படிப்பில் 13 பாடப் பிரிவுகளும், M.Phil. படிப்பில் 6 பாடப் பிரிவுகளும் மற்றும் Ph.D. படிப்பில் 7 பாடப் பிரிவுகளும் உள்ளன.

அதேபோல், அனைத்து கல்லூரிகளிலும் அந்தந்தப் பகுதியிலுள்ள மாணவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல், படிப்பதற்குண்டான வழிவகைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசானது தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது. அந்த வகையிலேதான், கடந்த 2011-2016 ஆம் ஆண்டில், 959 புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்கிய பெருமையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்பதை சுட்டிக்காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவருடைய கருத்துகள் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.

முற்பகல் 10-25

திருமதி பொன். சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தினைத் தொடங்கி ஆன்மிகத்தை நிலைநாட்டி, அகிலத்தின் அன்னபூரணியாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உயர் கல்வி சம்பந்தப்பட்ட வினாவில் அறநிலையத் துறை தொடர்பான கேள்வியைக் கேட்கிறீர்களே?

வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மாரியப்பன் கென்னடி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

104—

குளிர்பதனக் கிடங்கு

***2015—திரு. சோ. மாரியப்பன் கென்னடி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதியில் மிளகாய்க்கென குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மானாமதுரை தொகுதியில் மிளகாய்க்கென குளிர்பதன சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளார்கள். மானாமதுரை தொகுதியில் மிளகாய்க்கென குளிர்பதன சேமிப்புக் கிடங்கு அமைக்கும் திட்டம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.